بسم الله الرحمن الرحيم نحمده ونصلّى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 20

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

15 ஷவ்வால் 1437 ஹிஜ்ரி கமரி 21 வஃபா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 21 ஜூலை 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நான் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை திருக்குர்ஆனை சிந்தித்து கவனமாகப் பார்த்துள்ளேன். மீண்டும் மீண்டும் பார்த்துள்ளேன். அதன் பொருளை நன்றாக சிந்தித்துப் பார்த்துள்ளேன். திருக்குர்ஆனில் எந்த அளவு இறை பண்புகளும் இறைவனது செயல்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ இந்த எல்லாப் பண்புகளையும் கொண்டிருக்கின்ற இறைவனின் பெயர் அல்லாஹ் என்றே அதில் கூறப்பட்டிருக்கின்றது.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து…

இறுதியில் நாம் இதனையும் வெளிப்படுத்த விரும்புகின்றோம். அப்துல் ஹகீம் கான் வழி தவறிச் செல்வதற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்ற எண்ணம் அவருக்கு ஏற்படக் காரணமாக இருந்ததும் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை அவர் தவறாகப் புரிந்து கொண்டதாகும். அது குறைவான அறிவு மற்றும் குறைவாக சிந்தித்தன் காரணமாக அவரிடம் ஏற்பட்டதாகும். அந்த வசனம் இதுவாகும்:

اِنَّ الَّذِیۡنَ اٰمَنُوۡا وَالَّذِیۡنَ هَادُوۡا وَالنَّصٰرٰی وَالصّٰبِئِیۡنَ مَنۡ اٰمَنَ بِاللّٰهِ وَالۡیَوۡمِ الۡاٰخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمۡ اَجۡرُهُمۡ عِنۡدَ رَبِّهِمۡ ۚ وَلَا خَوۡفٌ عَلَیۡهِمۡ وَلَا هُمۡ یَحۡزَنُوۡنَ

அதாவது, எவர்கள் யூதர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும், நட்சத்திரத்தை வணங்குபவர்களாகவும் இருக்கின்றனரோ அவர்களில் எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்வாரோ அவரை இறைவன் வீணாக்க மாட்டான். அத்தகைய மக்களுக்குரிய நற்கூலி அவர்களது இறைவனிடம் இருக்கின்றது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது; கவலையும் இருக்காது.☆

இவர்கள் தமது அறியாமையினாலும் கோணலான புத்தியின் காரணமாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்வதற்கு எந்தத் தேவையும் இல்லை என்று இந்த வசனத்திலிருந்தே தமது சுய கருத்தைப் பின்பற்றிச் சென்றவாறு திருக்குர்ஆனின் உறுதியான மற்றும் தெளிவான கருத்தை எதிர்க்கின்றனர். இஸ்லாத்திலிருந்து வெளியேறுவதற்காக உவமை வடிவிலான வசனங்களின் ஆதரவைத் தேடுகின்றனர். இந்த வசனத்திலிருந்து அவர்கள் எந்தப் பலனையும் பெற முடியாது என்பதை அவர்கள் நினைவில் வைத்து கொள்ளட்டும். ஏனென்றால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதும், மறுமையின் மீது நம்பிக்கை கொள்வதும், திருக்குர்ஆன் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதை கட்டாயமாக்கி விடுகின்றது.

காரணம் என்னவென்றால், இறைவன் 'அல்லாஹ்' என்ற பெயருக்கு இவ்வாறு விளக்கம் கூறியுள்ளான். அதாவது, அல்லாஹ் எப்படிப்பட்டவன் என்றால் அவன் ரப்புல் ஆலமீனாகவும், ரஹ்மானாகவும், ரஹீமாகவும் இருக்கின்றான். அவன் வானத்தையும் பூமியையும் ஆறு காலகட்டங்களில் உருவாக்கினான். ஆதமைப் படைத்தான். தூதர்களை அனுப்பினான். வேதங்களை அருளினான். எல்லாவற்றிற்கும் இறுதியாக காத்தமுல் அன்பியாவாகவும் தூதர்களில் சிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.'.பா (ஸல்) அவர்களைப் படைத்தான். திருக்குர்ஆனின் அடிப்படையில் மறுமை நாள் என்பது இதுவாகும். அந்நாளில் மரணித்தவர்கள் உயிர் பெற்று எழுவர். பிறகு, ஒரு பிரிவினர் பௌதீக மற்றும் ஆன்மீக அருள்களின் இடமாகிய சுவர்க்கத்தில் நுழைக்கப்படுவர். ஒரு பிரிவினர் ஆன்மீக மற்றும் பௌதீக தண்டனைக்குரிய இடமாகிய நரகத்தில் நுழைக்கப்படுவர். இறைவன் திருக்குர்ஆனில் இந்த வேதத்தின் மீது நம்பிக்கை கொள்பவர்களே மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்வர் என்று கூறுகின்றான்.

அல்லாஹ் சுயமே, அல்லாஹ் மற்றும் மறுமை நாள் என்ற சொற்களுக்கு இஸ்லாத்துடன் குறிப்பாகப் பொருந்துகின்ற விளக்கமான அத்தகைய பொருளைத் தந்திருக்கும்போது அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பது கட்டாயமான விஷயமாகி விடும். இந்தப் பொருள்களை மாற்றுவதற்கான உரிமை எவருக்கும் இல்லை. திருக்குர்ஆன் எடுத்துக் கூறியுள்ள பொருள்களுக்கு மாற்றமாகவும் எதிராகவும் இருக்கின்ற ஏதாவதொரு பொருளை நம் தரப்பிலிருந்தும் கண்டுபிடிப்பதற்கான அனுமதி நமக்கு இல்லை. நான் ஆரம்பித்திலிருந்து இறுதி வரை திருக்குர்ஆனை சிந்தித்து கவனமாக பார்த்துள்ளேன். மீண்டும் மீண்டும் பார்த்துள்ளேன். திருக்குர்ஆனில் எந்த அளவு இறைவனின் பண்புகள் மற்றும் இறைவனின் செயல்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதோ இந்த எல்லா பண்புகளையும் கொண்டிருக்கின்ற இறைவனின் பெயர் 'அல்லாஹ்' என்றே அதில் கூறப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக, اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ என்று கூறப்பட்டிருக் -கின்றது. அவ்வாறே இதுபோன்ற இன்னும் பல வசனங்களில் திருக்குர்ஆனை இறக்கியவன் அல்லாஹ் ஆவான். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பியவன் அல்லாஹ் ஆவான் என்று கூறப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனின் மரபுக்கேற்ப அல்லாஹ் என்ற கருத்தில் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பியவன் அல்லாஹ் ஆவான் என்பது அடங்கி இருப்பதனால் எந்த நபர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளும்போதுதான் அவரது ஈமான் நம்பத்தகுந்ததாகவும் சரியானதாகவும் கருதப்படும். இறைவன் இந்த வசனத்தில் من امن بالرحمن - எவர் ரஹ்மான் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றாரோ من امن بالرحيم - எவர் ரஹீமின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றாரோ என்று கூறவில்லை. மாறாக, من امن بالله - எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டிருக் -கின்றாரோ என்றே கூறியுள்ளான். எல்லா முழுமையான பண்புகளையும் ஒருங்கே கொண்டிருப்பவன் என்பதே அல்லாஹ் என்பதன் கருத்தாகும். திருக்குர்ஆனை அவனே இறக்கியுள்ளான் என்பது அவனது ஒரு மகத்தான பண்பாகும். ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு திருக்குர்ஆனின் மீதும் நம்பிக்கை கொள்ளும்போது அந்த நபர் தொடர்பாக மட்டும்தான் அவர் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளார் என்று நம்மால் கூற முடியும். பிறகு ان الذين امنو - எவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனரோ என்பதன் பொருள் என்ன? என்று எவராவது கேட்பதாக இருந்தால் அதன் பொருள் இதுவாகும் என்பதை அவர் நினைவில் கொள்ளட்டும். அதாவது, எந்த மக்கள் அல்லாஹ்வின் மீது மட்டும் நம்பிக்கை கொள்கின்றனரோ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் மீது நம்பிக்கை கொள்ளாத வரை அல்லது அந்த நம்பிக்கையை முழுமைப் -படுத்தாத வரை அவர்களின் ஈமான் நம்பத்தகுந்தது அல்ல. திருக்குர்ஆனில் முரண்பாடு இல்லை என்ற விஷயத்தையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். நூற்றுக்கணக்கான வசனங்களில் இறைவன் ஓரிறைமை மட்டும் போதுமானது அல்ல. மாறாக, ஒருவர் ஒரு நபியைப் பற்றி அறவே தெரியாமல் இருக்கின்றதை தவிர அவனது நபியின் மீது நம்பிக்கை கொள்வது இரட்சிப்பைப் பெறுவதற்கு அவசியமானதாகும் என்று கூறியிருக்க பிறகு ஒரேயொரு வசனத்தில் மட்டுமே இதற்கு நேர்மாற்றமாக ஏகத்துவத்தின் மூலமாக மட்டுமே இரட்சிப்பைப் பெற்று விடலாம். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ள

(தொடர்ச்சி 6-வது பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**நோன்பு தக்வாவைக் கற்பதற்கான ஒரு வழியாக இருப்பதுபோன்று இறை நெருக்கம் பெறுவதற்கான ஒரு வழியாகவும் இருக்கிறது. எனவே, அதனை தக்வாவைக் கற்கவும், தக்வாவுடன் வாழ்வைக் கழிக்கவும், இறை நெருக்கம் பெறுவதற்கான வழியாக அதனை ஆக்கவும் முயற்சி செய்யாமல் ரமலான் மட்டும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக ஆகாது. இந்த சூழ்நிலை உருவாகி விட்டால் பிறகு அல்லாஹ்வினால் ரமலானுடன் உருவாக்கப்பட்ட இந்தத் தொடர்பு ரமலானுடன் நிற்காது. மாறாக, நிரந்தர மாற்றத்தின் அடையாளங்கள் வெளிப்படும்.**

**துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதன் நிபந்தனைகள், அதன் விதிமுறைகள் மற்றும் அதன் தத்துவம் ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேலான கட்டளைகளைச் சான்றாகக் காட்டி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஜமாஅத் சகோதரர்களுக்கு வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.**

**லாஹூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய ராஜா காலிப் அஹ்மது சாஹிப் அவர்களும், ஜெர்மனியைச் சார்ந்த மதிப்பிற்குரிய மலிக் முஹம்மது அஹ்மது சாஹிப் அவர்களும் வஃபாத்தாகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**17 ஜூன் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **17 இஹ்ஸான்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔
وَاِذَا سَاَلَکَ عِبَادِیْ عَنِّیْ فَاِنِّیْ قَرِیْبٌ۔ اُجِیْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ۔
فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

*எனது அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேள்வி கேட்டால் நிச்சயமாக நான் அருகில் இருக்கிறேன். அவர்கள் என்னிடம் துஆ செய்யும்போது அவர்களின் துஆவிற்கு பதிலளிக்கிறேன். ஆகவே, அவர்களும் என் கட்டளையை ஏற்றுக் கொண்டு நேர்வழி பெறுவதற்காக என் மீது ஈமான் கொள்ளட்டும்! (2:187)*

நோன்பு வைப்பதற்கான கட்டளைகள், அதன் நிபந்தனைகள் பற்றிய வசனங்களின் நடுவில் இந்த வசனத்தை வைத்து அல்லாஹ் ரமலான் மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகியவற்றிற்கிடையில் உள்ள சிறப்பான தொடர்பின் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்தத் தொடர்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்: "நோன்பு தக்வாவைக் கற்பதற்கான ஒரு வழியாக இருப்பதுபோன்று இறை நெருக்கம் பெறுவதற்கான ஒரு வழியாகவும் இருக்கிறது." (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 1, பக்கம் 308) எனவே, அதனை தக்வாவைக் கற்கவும், தக்வாவுடன் வாழ்வைக் கழிக்கவும், இறை நெருக்கம் பெறுவதற்கான வழியாக அதனை ஆக்கவும் முயற்சி செய்யாமல் ரமலான் மட்டும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக ஆகாது. இந்த சூழ்நிலை உருவாகி விட்டால் பிறகு அல்லாஹ்வினால் ரமலானுடன் உருவாக்கப்பட்ட இந்தத் தொடர்பு ரமலானுடன் நிற்காது. மாறாக, நிரந்தர மாற்றத்தின் அடையாளங்கள் வெளிப்படும். அல்லாஹ்வும் இதனையே, நான் அருகில் இருக்கிறேன் என்று இந்த வசனத்தில் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த மாதத்தில் ஷய்த்தான் பிணைக்கப்படுகிறான். இறைவன் அருகில் வருகிறான். கீழுள்ள வானத்திற்கு வருகிறான். (சஹீஹ் புகாரி கிதாபுஸ்ஸவ்ம் பாபு ஹல் யகூலு ரமழான அவ் ஷஹ்ரு ரமழான. ஹதீஸ் எண்: 1899 மற்றும் புகாரி கிதாபுத் தவ்ஹீது ஹதீஸ் எண்: 1145) ஆனால், யாருக்கு அருகில் வருகிறான்? அல்லாஹ்வின் நெருக்கத்தை உணர்பவர் அல்லது உணர விரும்புபவர் மேலும், அதற்காக அவனது வார்த்தைகளை ஏற்றுக் கொள்பவரது அருகில் வருகின்றான். அவர்கள் فَلْيَسْتَجِيْبُوْا لِيْ என்ற அல்லாஹ்வின் இந்த கட்டளையின்படி செயல்பட முயற்சி செய்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளைத் தேடுகின்றனர். அதன்படி செயல்படுவதற்குத் தயாராக இருக்கின்றனர். இறைவன் எல்லா ஆற்றல்களும் வாய்ந்தவன் என்றும், நான் அவனது கட்டளைகளின்படி செயல்பட்டவாறு அவனிடம் கலப்பற்ற முறையில் கேட்பேன் எனில், அவன் கண்டிப்பாக கேட்பான் என்றும் ஈமான் கொள்கின்றனர். ஆகவே, அல்லாஹ் நிச்சயமாக தனது அடியார்களின் கேள்விக்கு இவ்வாறு பதில் கூறுகிறான். நான் அருகில் இருக்கிறேன். நான் எனது அடியார்களின் துஆக்களைக் கேட்கிறேன். இந்த மாதத்தில் குறிப்பாக நான் உங்கள் அருகில் வந்து விட்டேன். என்னை அழையுங்கள். ஆனால், உங்கள் துஆவை ஏற்றுக் கொள்வதற்காக என்னை அழைப்பதற்கு முன் இந்த நிபந்தனையையும் கடைபிடிக்க வேண்டும். அதாவது, என் பேச்சையும் கேளுங்கள். எனது கட்டளைகளை நிறைவேற்றுங்கள். இதுவே நிபந்தனையாகும். எனது எல்லா ஆற்றல்கள் மீதும் முழுமையான நிச்சய உறுதி கொள்ளுங்கள். ஆகவே, நாங்கள் துஆ செய்கிறோம். எங்கள் துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று கூறுபவர்கள் எந்த அளவுக்கு இறை கட்டளைகளின் படி செயல்படுகிறோம் என்று ஆராய வேண்டும். நம்மிடம் செயல் இல்லை; நமது ஈமான் வெறும் சம்பிரதாயமானது என்றால் பிறகு நாம் அல்லாஹ்வை அழைத்தோம். ஆனால் எங்கள் துஆக்கள் ஏற்கப்படவில்லை என்று கூறுவது தவறாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்விஷயத்தை விளக்கியவாறு கூறுகிறார்கள்: "முதல் விஷயமாக அல்லாஹ் இதனை கூறியுள்ளான். எத்தகைய ஒரு தக்வா மற்றும் இறை அச்சத்தை உருவாக்க வேண்டும் எனில் நாம் அவனது அழைப்பை கேட்க வேண்டும்." (அய்யாமே சுலஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 14, பக்கம் 261) தக்வா உருவாக வேண்டும். இறையச்சம் வேண்டும். பிறகு இறைவன் அவரது குரலைக் கேட்கிறான்.

இரண்டாவது விஷயம், என் மீது ஈமான் கொள்ளுங்கள் என்பதாகும். எத்தகைய ஈமான்? இறைவன் இருக்கிறான். எல்லா ஆற்றல்களையும் வல்லமை –களையும் கொண்டிருக்கிறான். இறைவன் எல்லா ஆற்றல்களையும் தன்னகத்தே கொண்டவன் என்ற அனுபவம் மனிதனிடம் உருவாகி இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம் அல்லது இறைவன் எல்லா விதமான ஆற்றல்களையும் உடையவன் என்ற ஞானம் கிடைத்திருக்கலாம் அல்லது கிடைக்காமல் இருக்கலாம். எவ்வாறிருப்பினும், அத்தகைய ஈமான் வேண்டும். இறைவன் இருக்கிறான். அவன் எல்லா ஆற்றல்களும் உடையவன் என்ற அத்தகைய ஈமான் இருக்க வேண்டும். அது மறைவான ஈமானாக இருப்பினும் சரியே. பிறகு இது நடந்து விட்டால் பிறகு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு ஞானம் உருவாகும். அதன் மூலம் இறைவனின் இருப்பு அவன் எல்லா ஆற்றல்களையும் உடையவன் மற்றும் அவன் துஆக்களுக்குப் பதிலளிப்பவன் என்பதையும் மனிதன் அனுபவத்தில் உணர்ந்து கொள்கிறான். முதலில் மனிதன் தமது ஈமானை உறுதிப்படுத்த வேண்டும். பிறகு அதற்கான ஆதாரமும் கிடைத்து விடும். துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலில் நிபந்தனைகளும் விதிமுறைகளும் மற்றும் அதன் தத்துவங்கள் ஆகியவற்றைக் குறித்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் விரிவாக பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒளியூட்டியுள்ளார்கள். இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அதன்மூலம் இக்கருத்தின் ஆழத்தைப் புரிந்தவாறு இந்த ரமலானை நாம் இறை நெருக்கத்தினை பெரும் வழியாக ஆக்கியவாறு நமது அறிவையும் ஞானத்தையும் அதிகரிக்க முடியும். அதன் மூலம் உண்மையான நேர்வழி பெறுபவர்களில் இணைய முடியும். ரமலானின் உண்மையான அருளையும் பெற முடியும். அவர்கள் என்னவெல்லாம் துஆ செய்தார்களோ அது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள். இது பற்றி ஓரளவு நான் தெளிவுபடுத்தினேன். அல்லாஹ் ஏற்றுக் கொள்வதற்காக சில நிபந்தனைகளை வைத்துள்ளான். அவற்றை நிறைவேற்றுவதும் நமது கடமையாகும்.

இதனை மேலும் தெளிவுப்படுத்தியவாறு ஏற்றுக் கொள்வதற்கு என்னென்ன விதிமுறைகள் உள்ளன? என்பதைப் பற்றியும் சில நேரங்களில் எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றிய பிறகும் கூட துஆ செய்தது போன்று நிறைவேறுவதில்லை என்பதைப் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: துஆவின் விதிமுறையாவது, அல்லாஹ் துஆ ஒப்புக் கொள்ளும் விஷயத்தில் நமது மதிப்பீட்டையும் விருப்பங்களையும் பின்பற்றுவதில்லை. பாருங்கள்! தாய்மார்களுக்கு தமது குழந்தைகள் எவ்வளவு அன்புக்குரியவையாக இருக்கின்றன. எந்த வகையான கஷ்டமும் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால், குழந்தை வீணான முறையில் அடம்பிடித்தால் நெருப்புக் கங்குகளையோ கூர்மையான கத்தியையோ கேட்டால், உண்மையான அன்பும் உளப்பூர்வமான அன்பும் கொண்ட தாய் குழந்தை தனது கையில் எரிகொள்ளியை எடுத்து கையை எரித்து கொள்வதையோ அல்லது கூர்மையான கத்தியை எடுத்து கையை வெட்டிக் கொள்வதையோ பார்க்கத் துணிவாளா? இந்த வழிமுறை மூலம் துஆ பதிலளிக்கப்படும் விதியை விளங்கலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இவ்விஷயத்தில் நான் சுயமே அனுபவமுள்ளவனாக இருக்கிறேன். துஆவில் ஏதாவது தீய பகுதி இருக்கும் எனில் அந்த துஆ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இவ்விஷயத்தை நன்றாக விளங்க முடியும். நமது அறிவு உறுதியானதும் சரியானதும் அன்று. பெரும்பாலான பணிகளை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்குரியது என்று கருதிக் கொண்டு செய்கிறோம். நமது கருத்தின்படி அது வாழ்த்துக்குரியதாகவே இருக்கும் என்று கருதி விடுகிறோம். ஆனால் இறுதியில் அது ஒரு கவலையாகவும் துக்கமாகவும் நம்மை பற்றிக் கொள்கிறது.''

சுருக்கமாக, மனித விருப்பங்கள் அனைத்தும் எல்லா நிலையிலும் சரியானது என்று கூறி விட முடியாது. உறுதியாக சரி என்று கூறி விட முடியாது. ''ஏனெனில் மனிதன் மறதியினால் உருவாக்கப்பட்டுள்ளான். எனவே, சில விருப்பங்கள் கேடு விளைவிப்பவையாக இருக்க வேண்டும்; இருக்கின்றன. அதனை அல்லாஹ் ஒப்புக் கொள்வது அவனது கருணையின் தகுதிக்கு தெளிவான எதிர்நிலையாகும்.'' ஆகவே, மனிதன் இவ்வாறு நடக்க வேண்டும் என்று கருதுகிறான். ஆனால், அவனது விருப்பங்கள் சிலவேளை நஷ்டம் விளைவிப்பவையாக இருக்கின்றன. அல்லாஹ் அதனை ஒப்புக் கொண்டு விட்டால் அது அல்லாஹ்வின் கருணையின் அந்தஸ்திற்கு முற்றிலும் எதிராகி விடுகிறது. அல்லாஹ் துஆ செய்கின்ற தனது அடியாருக்காக கருணையை விரும்புகிறான். அவனது எல்லா விருப்பங்களையும், அது நஷ்டம் விளைவிப்பதாக இருந்தாலும் கூட அதனை ஏற்றுக் கொண்டால் அது அவனது ரஹ்மத்தின் தகுதிக்கு எதிரான விஷயமாகவே ஆகி விடும் என்றால் அதனை ஏற்பதில்லை. ''அல்லாஹ் தனது அடியார்களின் துஆவை கேட்கிறான். அதற்கு ஏற்றுக் கொள்ளப்படுதலின் சிறப்பை வழங்குகிறான் என்பது மிகவும் உறுதியான உண்மையான விஷயமாகும். ஆனால், ஒவ்வொரு நன்மை மற்றும் தீமையின் துஆவையும் கேட்கிறான் என்பதல்ல. நஃப்ஸின் எழுச்சியின் காரணமாக உணர்ச்சி வசப்படுதலின் மூலமாக முடிவு மற்றும் விளைவுகளை மனிதன் பார்ப்பதில்லை. துஆ செய்கிறான். ஆனால் அல்லாஹ் உண்மையான முறையில் நன்மையை நாடுபவனும் தொலைநோக்குப் பார்வையுடையவனும் ஆவான். முடிவில் கேடு மற்றும் தீய விளைவு ஆகியவை துஆ செய்பவருக்கு ஏற்பட முடியும் என்ற நிலையில் அதனை ஒப்புக் கொள்வதில்லை.'' மனிதனால் பார்க்க முடிவதில்லை. ஆனால், அல்லாஹ் தனது அடியானின் உண்மையான நலம் விரும்பி ஆவான். அவனுக்கு நன்மையையே விரும்புகிறான். அவனது முடிவு பற்றி அவனது பார்வையில் படுகிறது. என்ன விளைவு ஏற்படும்? என்று அறிகிறான். அதில் உள்ள குறைகள், ஏற்பட விருக்கும் நஷ்டங்கள் ஆகியவற்றை முன்னிறுத்தி துஆவை ரத்து செய்கிறான். இந்த துஆவை மறுப்பதில்தான் அடியானுக்கு நன்மை விளையும் என்று கருதுகிறான். ''இந்த துஆவினை மறுப்பதே அவருக்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் ஆகிறது.'' அத்தகைய துஆ மறுக்கப்படுகிறது. மறுக்கப் –படுகிறது எனில் அதுவே ஒப்புக் கொள்ளப்படுதல் ஆகும். ஏனெனில் இறைவன் அது அந்த அடியானுக்கு நல்லதல்ல என்று கருதினான். ''மனிதன் விபத்துக்களிலும் கேடுகளிலும் இருந்து பாதுகாப்பாக இருக்கத்தக்க துஆவை அல்லாஹ் ஒப்புக் கொள்கிறான். ஆனால், அவனுக்கு இழப்பை ஏற்படுத்தும் துஆக்களை அதனை மறுப்பதன் மூலம் ஏற்றுக் கொள்கின்றான்.'' சில துஆக்களில் பயன் இருக்கும் எனில் அவன் கேட்டவாறே ஏற்றுக் கொள்கிறான். மனிதனுக்கு நஷ்டம் ஏற்படும் எனில் அதனை மறுத்து விடுகிறான். அதுவே அவனைப் பொருத்தவரையில் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்லாஹ்விடம் இருந்து எனக்கு இவ்வாறு பலமுறை இல்ஹாம் வந்துள்ளது. اُجِيْبُ كُلَّ دُعَائِكَ இன்னொரு வார்த்தையில் இதனை இவ்வாறு கூறலாம். நன்மையும் பலனும் விளைவிக்கும் உமது ஒவ்வொரு துஆவும் ஏற்றுக் கொள்ளப்படும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 106-107; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) மற்றபடி ஒவ்வொரு துஆவும் ஏற்றுக் கொள்ளப்படாது. எனவே, அல்லாஹ் தனது நபிமார்கள் வலிமார்களின் சில துஆக்களை ஒப்புக் கொள்கிறான். சில துஆக்களை ஒப்புக் கொள்வதும் இல்லை. அவை பயன் தரக் கூடியவை அல்ல என்று கருதுவதால் அவன் கேட்பதில்லை. அதன் விளைவு பயங்கரமானதாக இருக்கலாம். அல்லாஹ் மறைவானவற்றை அறிந்தவன். அவன் நன்கறிந்தவன். பிறகு இந்த விஷயத்தை மேலும் தெளிவுபடுத்தியவாறு அதாவது துஆ செய்வதற்கு முதலில் ஒருவர் தனது செயல்களையும் கொள்கைகளையும் கூட நோட்டமிட வேண்டும் என்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எவர் செயல்களைப் பயன்படுத்தவில்லையோ அவர் துஆ செய்யவில்லை என்பது உண்மையாகும்.'' துஆ மட்டும் அவசியமல்ல. செயல்களும் அவசியமாகும். ''அவர் இறைவனை சோதிக்கிறார்.'' செயல்கள் இல்லையெனில் அவர் துஆ மட்டும் செய்கிறார் எனில் அது துஆ அல்ல. அவர் இறைவனை சோதிக்கிறார். ''எனவே, துஆ செய்வதற்கு முன் ஒருவர் தமது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்துவது அவசியமாகும். இதுவே இந்த துஆவின் பொருளாகும். முதலில் மனிதன் தனது கொள்கைகள் மற்றும் செயல்களின் பக்கம் பார்வையைச் செலுத்த வேண்டும். ஏனெனில் இறைவனின் வழக்கமாவது சீர்திருத்தம் காரணிகளைத் தொடர்ந்து வருகிறது.'' சீர்திருத்தம் ஏற்படுகிறது. அதற்கு சில காரணிகள் இருக்க வேண்டும். ''அவை சீர்திருத்தம் ஏற்படக் காரணமான சில விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. துஆ செய்யப்பட்டது. பிறகு காரணிக்கு என்ன தேவை? என்று கூறுபவர்கள் சிறிது சிந்திக்க வேண்டும். அவர்கள் அறிவற்றவர்கள். துஆவுமே ஒரு மறைவான காரணியாகும். ஒரு வேலையைச் செய்வதற்கு துஆவே ஒரு மறைவான காரணியாக இருக்கிறது. அது பிற காரணிகளை உருவாக்குகிறது. துஆவினை செய்வதால் காரணிகள் உருவாகின்றன. அவற்றைச் செய்வதற்கு அதாவது மனிதனுக்கு கடன் தேவைப்படும் போது பணம் தேவைப்படும் போது அல்லாஹ் ஏதாவதொரு வழிமுறை மூலம் அதனை ஆயத்தம் செய்து விடுகிறான். அவருக்கு எளிதை உருவாக்கி விடுகிறான். வானத்திலிருந்து எதுவும் விழுந்து விடுவதில்லை. ஒருவருக்கு பைசா தேவை எனில் அது வானத்திலிருந்து இறங்குவதில்லை. மாறாக, ஏதாவது ஒரு வழி உருவாகும். அந்தக் காரணியை துஆவின் மூலம் இறைவன் ஏற்படுத்துகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''இய்யாக நஸ்தயீன் என்ற துஆவைக் கொண்ட சொற்களுக்கு முன் இய்யாக்க நஃபுது என்பதை முதலில் வைத்துள்ளான். இது இவ்விஷயத்தை குறிப்பாக விளக்குகிறது. முதலில் இய்யாக்க நஃபுது கூறி விட்ட பிறகு உன்னிடமே உதவி தேடுகிறோம் என்கிறார். முதலில் துஆ செய்கிறார். பிறகு உதவி தேடுகிறார். துஆ செய்வதுடன் உதவியின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. சுருக்கமாக, இறைவனது வழக்கத்தை இவ்வாறே பார்க்கிறோம். அவன் காரணிகளை உருவாக்குகின்றான். பாருங்கள்! தாகத்தை தணிக்க தண்ணீரையும், பசியைப் போக்க உணவையும் ஏற்பாடு செய்கிறான். ஆனால், காரணிகள் மூலமாக ஒரு வழியை ஏற்படுத்துகிறான். ஆகவே, இந்தக் காரணிகளின் தொடர் இவ்வாறே செல்கிறது. காரணிகளான படைப்புகள் கண்டிப்பாக உருவாகின்றன. ஏனெனில், இறைவனுக்கு இரண்டு பெயர்கள் உள்ளன. كَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا அஸீஸ் என்பது ஒவ்வொரு பணிகளையும் செய்து முடிக்க ஆற்றல் கொண்டது. ஹகீம் என்பது ஒவ்வொரு பணியையும் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான இடத்தில் செய்வதற்குப் பெயராகும். பாருங்கள்! உயிரற்றவைகளில், தாவரங்களில் எத்தனை விதமான பலன்கள் இருக்கின்றன. சில மருந்துகளை சிறிதளவு உட்கொண்டாலும் மலச்சிக்கல் நீங்கி விடுகிறது. அது இல்லாமல் கூட மலச்சிக்கலை அகற்றுவதற்கு அல்லாஹ் ஆற்றல் பெற்றவன்தான். அதுபோன்று சிக்மோனியா உண்டால் வாந்தி வருகின்றது. அது இல்லாமலேயே வாந்தியை வர வைக்கவும் அல்லாஹ் ஆற்றல் உடையவன். தண்ணீர் இல்லாமலேயே தாகத்தைத் தணிக்கவும் ஆற்றல் உடையவன். ஏனெனில், வல்லமையின் அற்புதத்தை வெளிப்படுத்துவதும் அவசியமாகும். எந்த அளவுக்கு மனிதனுக்கு இறை வல்லமையின் அற்புதம் பற்றிய அறிவு இருக்குமோ அந்த அளவுக்கு அவன் அல்லாஹ்வுடைய பண்பில் இருந்து தக்வாவைப் பெற்று இறை நெருக்கம் பெறுவதற்கு தகுதியானவனாகி விடுகிறான்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 124-125; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் உருவாக்கிய இந்தப் பண்புகள் மற்றும் சிறப்புகள் ஆகியவற்றை அறியச் செய்ய வைப்பதும் இறைவனுக்கு அவசியமாக இருந்தது. அதனையும் இறைவனே உருவாக்கினான். இறைவன் படைத்த பொருள்களைப் பற்றிய அறிவு அதிகரிக்கும்போது அது எவ்வளவு பரந்ததாக இருக்குமோ அந்த அளவுக்கு அவனது பண்புகளைப் பற்றி மனிதன் அறிந்து கொள்கிறான். அதற்கான புரிதிறன் மனிதனுக்கு ஏற்படுகிறது. அதனைப் புரிந்து கொள்வதற்கு மனிதன் தகுதி படைத்தவன் ஆகின்றான். இதுவே, ஒரு மார்க்கவாதியின் பணியாகும். ஒரு நாத்திகவாதி தனது அறிவு மிக அதிகம் என்று கருதுகிறான். ஆனால், ஒரு முஃமின் அந்த அறிவு அதிகரிக்கும்போது அவனது வல்லமை மற்றும் பண்பை அறிபவர் ஆகிறார்.

பிறகு துஆவின் தத்துவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்: ''பாருங்கள்! ஒரு குழந்தை பசியினால் பாலுக்காக கதறுகிறது. உடனே தாயின் மார்பகத்தில் பால் சுரக்கிறது. ஆனால், குழந்தையோ துஆவின் பெயரையும் கூட அறிவதில்லை. ஆனால், என்ன காரணத்தால் குழந்தையின் அழுகை பாலை சுரக்க வைக்கிறது? இது எத்தகைய விஷயம் எனில் ஒவ்வொருவரும் இதனை தனது அனுபவத்தில் அறிந்திருக்கிறார். சில நேரங்களில் பார்க்கப்படுகிறது. பெண்கள் தமது மார்பகத்தில் பாலை உணரவும் கூட செய்வதில்லை. சில நேரங்களில் பால் இருப்பதும் இல்லை. அந்த நேரத்தில் குழந்தையின் வேதனைமிக்க கதறல் அவனது காதுகளில் பட்டு விட்டால் பால் உடனே இறங்கி வருகிறது. குழந்தையின் கதறலுக்கும் பாலின் சுரப்புக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நான் உண்மையாக கூறுகிறேன். இறைவனிடம் நமது கதறலும் அதைப் போன்றதே. அதுவும் அவனது கருணையைப் பொங்கி எழச் செய்கிறது. அதனை ஈர்த்துக் கொண்டு வருகிறது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 198; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இதனை மேலும் விளக்கியவாறு தாய் குழந்தையின் உதாரணம் கொடுத்தவாறு துஆவின்

தத்துவத்தை விளக்கியவாறு அதன் கீழ் துஆ கேட்பது மனிதனின் சிறப்புத் தன்மையாக இருக்க வேண்டும். பிறகு இறைவனும் ஏற்றுக் கொள்தலின் காட்சியைக் காட்டுகிறான் என்பதை அன்னார் விளக்குகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''கேட்பது மனிதனின் சிறப்புத் தன்மையாகும். பதில் அளித்தல் அல்லாஹ்வின் சிறப்புத் தன்மையாகும். எவர் புரியவில்லையோ ஏற்பதில்லையோ அவர் பொய்யராவார். குழந்தையின் உதாரணத்தை நான் விளக்கினேன். அது துஆவின் தத்துவத்தை நன்றாக விளக்கிக் காட்டுகிறது. *ரஹ்மானிய்யத் ரஹீமிய்யத்* இரண்டும் தனித்தனி பண்புகள் அல்ல. ஆகவே, ஒன்றை விட்டு விட்டு இன்னொன்றை விரும்புபவருக்கு அது கிடைக்காது.'' (ரஹ்மானியத்தை விட்டு விட்டு ரஹீமிய்யத் வேண்டினால் அது கிடைக்க இயலாது.) ரஹ்மானியத்தின் விளைவானது நம்மிடம் ரஹீமிய்யத்திலிருந்து பயனடைவதற்கான சக்தியை உருவாக்குவது ஆகும். (அல்லாஹ்வின் ரஹீமிய்யத்தைக் கேட்பதற்கான ஆற்றலை ரஹ்மானியத் வழங்குகிறது. அதுவே ஆற்றலை உருவாக்குகிறது.) அவ்வாறு செய்யாதவர் இறை அருளை மறுத்தவர் ஆவார். *நஃபுது* என்பதன் பொருள் இதுவாகும். நாங்கள் உன்னையே வணங்குகிறோம். இந்த வெளிப்படையான காரணிகள் மூலம் இதனை நீயே வழங்கினாய். நாங்கள் இறை வணக்கம் செய்கிறோம். வெளிப்படையான காரணிகளுள் ஒன்று துஆவாகும். இது அவற்றை செயல்பட வைப்பதற்காக உருவாக்கப்பட்டது. பாருங்கள்! நாவு, நரம்புகள், தொண்டை, தசைகள், வாய் அதனுள் உமிழ்நீர் உள்ளது. இவை இல்லை எனில் நாம் பேச முடியாது. நாவு காய்ந்து போய் விட்டால் மனிதன் பேச முடியாது. நாக்கில் உள்ள ஒரு தசை இழுக்கப்பட்டு விட்டால் நாம் பேச முடியாது.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''துஆ செய்வதற்காக ஒரு நாவை வழங்கினான். அது உள்ளத்தின் எண்ணத்தைக் கூட வெளிப்படுத்தி விடுகிறது. நாவை வழங்கினான். உள்ளத்தின் எண்ணங்கள் அதன் மூலம் வெளிப்படுவதற்காக அவ்வாறு செய்தான். நாம் நாவின் மூலம் துஆவின் வேலையை வாங்கா விட்டால் அது நமக்கு பேரிழப்பாகும். பெரும்பாலான நோய்கள் எத்தகையவை எனில் அவை நாவிற்கு வந்து விட்டால் ஒரேடியாக நாக்கு அதன் வேலையை விட்டு விடுகிறது. எந்த அளவுக்கு எனில் மனிதன் ஊமையாகி விடுகிறான். எனவே, நமக்கு ஒரு நாவை தந்திருப்பது எத்தகைய ரஹீமிய்யத் ஆகும்? அதே போன்று காதுகளின் படைப்பில் ஏதேனும் பங்கம் இருந்தால் ஒன்றுமே கேட்காது. அது போன்றே உள்ளத்தின் நிலையும் ஆகும். அதனை இறையச்சம் பணிவும் நிறைந்த நிலையில் வைத்துள்ளான். சிந்திக்கவும் பகுத்துணரவும் அதிக ஆற்றலை வைத்துள்ளான். நோய் வந்து விட்டால் உடனே எல்லாம் செயலிழந்து விடுகிறது. பைத்தியங்களைப் பாருங்கள்! அவற்றின் ஆற்றல்கள் எவ்வாறு செயலிழந்து விடுகின்றன. எனவே, இந்த இறைவனால் வழங்கப்பட்ட நிஃமத்துகளை மதிப்பது நமக்கு கண்டிப்பானதில்லையா? இறைவன் தனது முழுமையான அருளால் வழங்கிய அந்த ஆற்றல்களை வீணாக விட்டு விட்டால் சந்தேகமின்றி நாம் இறை அருளை மறுத்தவர் ஆவோம். நன்றிகேடு காட்டியவர் ஆவோம். எனவே, நினைவில் கொள்ளுங்கள். தனது ஆற்றலையும் சக்தியையும் கை விட்டு விட்டு துஆ செய்கிறார் எனல் அந்த துஆ சிறிதும் பயன்தர இயலாது.'' அல்லாஹ் ஆற்றலை வழங்கியுள்ளான். சக்தியை வழங்கியுள்ளான். திறமையை வழங்கியுள்ளான். காரணிகளின் பக்கம் கவனம் செலுத்த கட்டளையிட்டுள்ளான். இவை அனைத்தையும் பயன்படுத்துங்கள். பிறகு துஆ செய்யுங்கள். அது இல்லாமல் துஆ எந்தப் பயனையும் தராது. ''ஏனெனில், நாம் முதலில் இறைவனது கொடையிலிருந்து பயன் பெறவில்லை எனில் பிறகு அடுத்த பொருளிலிருந்து என்ன பயனடைய முடியும்?'' (மல்.ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 130-131; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) காரணிகளை உருவாக்கி இருப்பதும் இறைவனது நன்கொடையாகும். அவற்றிலிருந்து பயன் பெறுவதன் மூலமே பிறகு துஆ செய்வதும் நமக்கு பயன் தர முடியும்.

பிறகு இயற்கைச் சட்டத்தில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்காக முன்மாதிரி இருக்கிறது என்பதை மேலும் விளக்கியவாறு கூறுகின்றார்கள்: ''இயற்கைச் சட்டத்தில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான முன்மாதிரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் இறைவன் உயிருள்ள முன்மாதிரிகளைக் காட்டுகின்றான். எனவே, அவன் *இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம்* என்ற துஆவை போதித்தான். இறைவனது விருப்பமும் சட்டமும் இதுவாகும். எவரும் இதனை மாற்ற இயலாது. *இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்* என்ற துஆவிலிருந்து விளங்குவதாவது எமது செயல்களை முழுமையானதாகவும் நிறைவானதாகவும் ஆக்குவாயாக! அதன் மூலம் எவ்வளவு உயர்ந்த இடத்திற்குச் செல்ல முடியுமோ கொண்டு செல்வாயாக! இந்த வசனங்களை ஆய்வு செய்வதிலிருந்து துஆ செய்வதன் கட்டளை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது தெரிய வருகிறது. வெளிப்படையாக இதில் ஒரு தெளிவான சைக்கினை உள்ளது. துஆ செய்யுங்கள். *ஸிராத்தல் முஸ்தகீம்* என்பதை கேட்பதற்கான போதனை உள்ளது. *ஸிராத்தல் முஸ்தகீம்* என்பதற்கான வழிகாட்டலை அல்லாஹ்விடம் கேளுங்கள். ஆனால் அதற்கு மேல் *இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தயீன்* என்று இருப்பதிலிருந்து தெரிய வருவதாவது, இதிலிருந்து பயனடையுங்கள். *ஸிராத்தல் முஸ்தகீம்* என்பதன் இலக்குகளை அடைவதற்காக ஆற்றல்களிலிருந்து பயனடைந்தவாறு இறை அருளை கேட்க வேண்டும். *ஸிராத்தல் முஸ்தகிம்* என்பதில் செல்வதற்காக அல்லாஹ் வழங்கிய ஆற்றல்களைப் பயன்படுத்துங்கள். அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். எனவே, வெளிப்படையான காரணிகள் அவசியமாகும். அதனை கை விட்டு விடுபவர் இறை அருளை மறுத்தவராவார்.'' (மல்.ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 199; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இன்னும் சில நோய்கள் இருக்கின்றன. அந்த நோய்கள் நாவிற்குத் தொற்றி விட்டால் அது முற்றிலும் வேலையை விட்டு விடுகிறது. இது ரஹீமிய்யத் ஆகும். அதேபோன்று உள்ளத்தில் இறையச்சம் மற்றும் பணிவின் நிலையை வைத்துள்ளான். சிந்திக்கவும், பகுத்துணரவும் சக்தியை வைத்துள்ளான்.

எனவே, நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த ஆற்றல்களையும் சக்தியையும் விட்டு விட்டு துஆ செய்தோம் என்றால், துஆ சிறிதும் பயனுடையதாக இருக்காது. ஏனெனில், முதல் கொடையிலிருந்து பயனடையாத நிலையில் மற்றதிலிருந்து என்ன பயன் அடையப் போகிறார்கள்? எனவே, இஹ்தினஸ் *ஸிராத்தல் முஸ்தகீம்* என்பதற்கு முன்னால் *இய்யாக்க நஃபுது* எனக் கூறியதிலிருந்து சொல்லப்படுவது நாம் உங்களுக்கு முந்தைய கொடைகளை வீணானதாகத் தரவில்லை. நினைவில் கொள்ளுங்கள். ரஹ்மானிய்யத்தின் சிறப்புத்தன்மை இதுவாகும். அது அவனை ரஹீமிய்யத்திலிருந்து பயனடைவதற்கு தகுதி உடையவனாக ஆக்குகிறது. எனவே, இறைவன் *உத்வூனி அஸ்தஜிபுலகும்* என்று கூறினான். இது வெறும் வார்த்தையல்ல. மாறாக, மனிதத் தன்மையின் சிறப்பு இதனை எதிர்பார்க்கிறது. கேட்பது மனிதனின் சிறப்புத் தன்மையாகும். அல்லாஹ்வின் பதில் அளிக்கும் பண்பைத் தேடாதவர் அநீதியிழைப்பவர் ஆவார். துஆ எத்தகைய இன்பத்தை வழங்கக் கூடியதாகும்! அந்தோ!! இதன் தேவையை நான் இவ்வுலகிற்கு எந்த சொற்களில் புரிய வைப்பேன்? அதனை உணர்வதன் மூலமே அறிய முடியும்.

சுருக்கமாக, துஆவின் இன்றியமையாதவற்றுள் ஒன்று, நற்செயல் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல். இறைவன் கட்டளையிட்ட செயல்களைச் செய்வது மற்றும் தமது ஈமான் மற்றும் கொள்கையை உறுதிப்படுத்துதல். ஏனெனில் எவர் தனது கொள்கைகளை சரிப்படுத்த மாட்டாரோ நற்செயல்களைப் பயன்படுத்த மாட்டாரோ, அத்தகையவர் துஆ செய்கிறார் என்றாலும் அவர் இறைவனை சோதிக்கிறார். விஷயம் என்னவெனில் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவின் நோக்கமாவது, நமது செயல்களை முழுமையானதாகவும் நிறைவானதாகவும் ஆக்க வேண்டும். பிறகு ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் என்று கூறி இன்னும் தெளிவுபடுத்தி விட்டான். நாம் எத்தகைய நேர்வழியைப் பெறும் பாதையை விரும்புகிறோம் எனில் அது அருளைப் பெற்றவர்களின் வழியாக இருக்க வேண்டும். எத்தகைய மக்களின் வழியை எங்களுக்கு வழங்க வேண்டும் எனில் உனது வெகுமதியைப் பெற்றவர்களின் வழியாக அது இருக்க வேண்டும். கோபத்திற்கு ஆளானவர்களின் வழியிலிருந்து காப்பாற்றுவாயாக! எமது செயல்கள் எப்போதும் நல்லவையாக இருக்க வேண்டும். இறைவனது கட்டளைக்கு எதிரான எந்த விஷயமும் எங்களிடம் இருக்கக் கூடாது. மேலும் *ளாழ்லீன்* என்று கூறி ஒரு துஆவை போதித்துள்ளான். எவர் மீது தீய செயலின் காரணமாக இறை தண்டனை வந்திருந்ததோ அம்மக்களை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! அவர்கள் பிறகு உனது ஆதரவிலிருந்தும் விலவி விட்டவர்கள் ஆவர். உனது ஆதரவு எமக்கு கிடைக்காத நிலையில் வழிதவறிச் செல்வதிலிருந்தும் எம்மை பாதுகாத்து அருள்வாயாக!'' (மல்.ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 199-200; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நாங்கள் உனது ரஹ்மானிய்யத்திலிருந்தும் பயன் அடையாமல் அதன் விளைவாக உனது ரஹீமிய்யத்திலிருந்தும் பயனடையாதவர்களாக ஆகி விடக் கூடாது. உனது உதவி, ஆதரவு, உனது கருணை, உனது அருள் ஆகியவற்றிலிருந்து நாங்கள் விலக்கப்பட்டு விடக் கூடாது. இவ்வாறு *ளாழ்லீன்* என்று கூறி இதன் பக்கம் கவனமூட்டியுள்ளான்.

பிறகு உலகியல்வாதிகளின் ஒரு கருத்தை மறுத்தவாறு அதாவது இறைவனுக்கு முன் அழுவதால் கதறுவதால் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை என்பவர்களின் கூற்றை மறுத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''சிலரது கருத்தாவது அல்லாஹ்விடம் அழுது புலம்புவதால் எதுவும் கிடைக்காது. இது முற்றிலும் தவறானதும் பொய்யானதும் ஆகும். அத்தகையோர் இறைவனது இருப்பு வல்லமை பண்புகள் மீது ஈமான் வைப்பதில்லை. அவர்களுக்கு உண்மையான ஈமான் இருக்கும் எனில் அவ்வாறு கூறுவதற்கு துணியமாட்டார்கள். ஒரு மனிதர் இறைவன் முன்னிலையில் வரும்போது அவனிடம் உண்மையான தவ்பாவுடன் திரும்புகிறார் எனில் அல்லாஹ் எப்போதும் அவர் மீது அருள் செய்துள்ளான்.''

ஒரு ஃபார்ஸி கவிதையில் ஒருவர் எவ்வளவு உண்மையாக இதனைக் கூறியுள்ளார்:

*நேசிக்கப்பட்டவர் அவரைப் பார்க்கவே இல்லை என்றால்*
*அந்த நேசர் எப்படிப்பட்டவர்?*
*அடியாரே! உமக்குள் வலியே இல்லை.*
*இருந்தால் மருத்துவர்தான் இருக்கிறாரே!*

உங்களிடம் வேதனையை உருவாக்குங்கள். இறைவன் கண்டிப்பாகக் கேட்கிறான். இறைவன் கூறுகிறான்: இறைவனிடம் தூய உள்ளத்தைக் கொண்டு வாருங்கள். அதற்கு நிபந்தனை இவ்வளவுதான். பொருத்தமான சூழ்நிலையை

உங்களிடம் உருவாக்குங்கள். *ஃபல் யஸ்தஜீபூ லீ* என்பதன்படி செயல்படுங்கள். அதுவே இறைவன் பக்கம் செல்லத்தக்க உண்மையான மாற்றத்தை உருவாக்குகிறது. அதனை உங்களிடம் செய்து காட்டுகிறது. நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகிறேன். அல்லாஹ்விடம் விதவிதமான ஆற்றல்கள் உள்ளன. அவனிடம் எண்ணற்ற அருள்களும் பரக்கத்துகளும் உள்ளன. ஆனால் அவற்றைப் பெறவும் பார்க்கவும் அன்பின் கண்களை உருவாக்குங்கள். உண்மையான நேசம் இருந்தால் இறைவன் அதிகமாக துஆக்களை கேட்கிறான். எனவே, அத்தகைய நேசத்தை உருவாக்குங்கள். அதன் மூலம் இறைவன் உங்கள் துஆக்களை கேட்பவனாக வேண்டும். அவன் உதவியும் செய்கிறான்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 352-353; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இறைவனது உண்மையான அன்பைப் பெறுவதற்கு மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும்? அதன் விளைவாக இறைவன் துஆவைக் கேட்க வேண்டும். நெருக்கத்தை வெளிப்படுத்தவும் வேண்டும்.

அதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நிபந்தனை என்னவென்றால் அன்பு, கலப்பற்ற தூய்மை இறைவனுடன் உங்களுக்கு இருக்கும் எனில் இறை நேசம் எத்தகையது எனில் இது மனிதனது கீழ்த்தர வாழ்க்கையை எரித்து அவனை ஒரு தூய தூய்மைக்கப்பட்ட மனிதனாக்கி விடுகிறது. சுத்தமாக்கி விடுகிறது. அப்போது அவர் பார்ப்பது முன்னர் பார்க்காததாகும். அவர் கேட்டது இதற்கு முன் கேட்காததாகும். சுருக்கமாக, இறைவன் என்னென்ன அருள்களை மனிதனுக்காக ஆயத்தம் செய்துள்ளானோ அதனைப் பெறவும் அதிலிருந்து பயனடையவும் அவரிடம் தகுதியையும் உருவாக்கியுள்ளான். வெறும் பொருட்களை மட்டும் படைக்கவில்லை. தகுதியையும் தந்துள்ளான். அவற்றைப் பயன்படுத்துங்கள். பயன் பெறுங்கள். அருள்களை வைத்து விட்டு அதற்கான தகுதிகளை வழங்கவில்லை என்றால், அப்போது அதுவும் ஒரு குறையாக இருந்திருக்கும் அல்லது அருள்கள் இருந்து தகுதி இல்லை என்றால் என்ன பயன்? ஆனால் அவ்வாறல்ல. அவன் தகுதியையும் வழங்கினான். அருட்களையும் பலன்களையும் செய்து தந்தான். இவ்வாறு ஒருபுறம் அவன் உணவிற்கான ஏற்பாடு செய்தான். இன்னொருபுறம் கண், நாவு, பற்கள், வயிறு, கல்லீரல் ஆகியவற்றைத் தந்தான். இவை அனைத்தின் வட்டத்தையும் உணவைச் சுற்றியதாக ஆக்கினான். அனைத்தும் உணவை ஜீரணம் செய்யத் தேவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வயிற்றுக்குள் எதுவும் போகவில்லை என்றால் இரத்தம் எங்கிருந்து இதயத்திற்கு வரும்? கழிவு எவ்வாறு வெளியில் செல்லும்?

இவ்வாறு இறைவன் எல்லாவற்றிற்கும் முதலில் இந்த அருளை செய்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இஸ்லாம் என்னும் முழுமையாக்கப்பட்ட மார்க்கத்தை வழங்கி அனுப்பினான். அன்னாரை காத்தமுன்னபிய்யீன் ஆக்கினான். திருக்குர்ஆன் என்ற முழுமையா காத்தமுல் கிதாப் (சிறப்பான வேதம்) –ஐ வழங்கினான். அதற்குப் பிறகு மறுமை வரை எந்த வேதமும் வராது அல்லது எவரும் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வரவும் மாட்டார். பிறகு ஒரு புலன் சிந்திக்கும் யோசிக்கும் ஆற்றல் ஆகும். அதிலிருந்து நாம் பயனடையவில்லை எனில் இறைவன் பக்கம் காலெடுத்து வைக்கவில்லை எனில் அது எத்தகைய சோம்பலும், அசட்டையும், நன்றிகேடும் ஆகும். சிந்தனை செய்யுங்கள். அல்லாஹ் இந்த முதல் சூராவிலேயே எத்தகைய சிறப்பான முறையில் அருளின் வழியைக் கூறி விட்டான்?''

எனவே இந்த வழிதான் மனிதன் பயனடைவதற்காக வழங்கியதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போன்ற ஒரு நபியை வழங்கினான். அவர்களின் வழியில் நாம் செல்ல வேண்டியவர்கள் ஆவோம். திருக்குர்ஆன் போன்ற ஒரு வேதத்தை வழங்கினான். அவற்றின் கட்டளைகள் நாம் பின்பற்றத்தக்கவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இறைவன் முதல் அத்தியாயத்திலேயே அதாவது சூரா ஃபாத்திஹாவிலேயே எவ்வளவு சிறப்பான முறையில் அருளின் வழியைக் கூறி விட்டான். இந்த சூராவின் பெயர் காத்தமுல் கிதாப் (சிறப்பான வேதம்) மற்றும் உம்முல் கிதாப் (வேதத்தின் தாய்) ஆகும். மனித வாழ்விற்கு என்ன நோக்கம் உள்ளது என்று இது தெளிவாகக் கூறி விட்டது. அதனைப் பெற என்ன வழிகள் உள்ளன? இய்யாக்க நஃபுது என்பதன் அசல் நோக்கமும் விருப்பமும் மேலும் அதனை இய்யாக்க நஸ்தயீனுக்கு முன்னால் கூறியதன் நோக்கமும் கூறுவதாவது, முதலில் அவசியமானது மனிதனது ஆற்றல், தைரியம் மற்றும் புரிதல் வர வேண்டிய விஷயமாவது, இறை வழியில் முயற்சி செய்வதற்கு சரியான வழியைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் இறைவனால் வழங்கப்பட்ட எல்லா ஆற்றல்களையும் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதாகும். அதன் பிறகு இறைவனிடம் அதனை முழுமைப்படுத்தவும் நல்விளைவு ஏற்படவும் துஆ செய்ய வேண்டும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 353-354; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் ஞானத்தைப் பெறுவதற்கு என்னென்ன வழிகள் உள்ளன? நெறிமுறைகள் உள்ளன என்று தெளிவுபடுத்தியவாறு கூறுகின்றார்கள்: *குலிக்கல் இன்ஸான ளயீஃபா* என்பது உண்மையான விஷயமாகும். மனிதன் பலவீனமான படைப்பாகும். மனிதன் அவனது அருளும் சிறப்பும் இன்றி எதுவும் செய்ய முடியாது. அவனது இருப்பு, பரிபாலனம், நிலைப்பு, ஆயத்தங்கள் அனைத்தும் இறை அருளைச் சார்ந்துள்ளன. தனது அறிவு, புத்தி, செல்வம் ஆகியவற்றால் பெருமையடிப்பவன் முட்டாள் ஆவான். ஏனெனில் இவை அனைத்தும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டதாகும். இவற்றை அவன் எங்கிருந்து கொண்டு வந்தான்?

துஆவுக்கு அவசியமானது மனிதன் தனது பலவீனம் இயலாமை ஆகியவற்றை முழுமையாக உணர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். எந்த அளவுக்கு தனது பலவீனத்தை ஆய்வு செய்வானோ அந்த அளவுக்கு இறைவனது அருளை கேட்பதற்கு தேவையுடையவனாக இருப்பான். அதன் மூலம் துஆவுக்காக தனக்குள் ஓர் எழுச்சி உருவாகி விடும். இந்த எழுச்சியை எங்களால் பெற முடியவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். தனது பலவீனத்தையும் இயலாமையையும் பாருங்கள். அவன் மீது அன்பு கொண்டதன் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். பிறகு ஓர் எழுச்சி உருவாகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் துன்பத்தால் பீடிக்கப்படும்போது கஷ்டத்தை உணரும்போது எழுச்சியுடன் அழைக்கிறார்; கததுகிறார்; மற்றவரிடம் உதவி கேட்கிறார். அதுபோன்று அவர் தனது பலவீனம் மற்றும் தவறுகள் மீது ஆய்வு செய்தால் தன்னை ஒவ்வொரு வினாடியும் இறை அருளின் தேவையுள்ளவராக உணர்வார் எனில் அவரது ஆன்மா முழு எழுச்சி மற்றும் வேதனையுடன் இறைவன் முன்னிலையில் விழுந்து கதறுகிறது. இறைவா! இறைவா! என்று அது அழைக்கும். திருக்குர்ஆனை ஆழ்ந்து படியுங்கள் தெரிய வரும். முதல் அத்தியாயத்திலேயே அல்லாஹ் துஆவையே போதித்துள்ளான். *இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம். கைரில் மக்ளூபி அலைஹிம் வலள்ளாழ்ழீன்.*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: துஆ எப்போது திரண்ட பொருளைக் கொண்டதாக இருக்கும் என்றால் தன்னகத்தே பயனையும் இலாபத்தையும் கொண்டதாக அது இருக்க வேண்டும். எல்லா நஷ்டங்களில் இருந்தும் தீமைகளிலிருந்தும் பாதுகாக்கக் கூடியதாக அது இருக்க வேண்டும். அத்தகைய துஆவே சரியானது இல்லையா?

எல்லா வகையான பலன்களும் தருவதாகவும் பின்னாளில் சிறந்ததாகவும் உள்ளவற்றை அது தன்னகத்தே கொண்டதாக இருக்க வேண்டும். நஷ்டங்கள் மற்றும் கஷ்டங்கள் மனிதனுக்கு வரலாம். அவற்றிலிருந்து அது அவனை பாதுகாக்க வேண்டும். எனவே, *இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம்* என்பதிலிருந்து *வளள்ளாழ்ழீன்* என்பது வரை உள்ள துஆவில் மிகச் சிறந்த பலன் எவ்வளவு மனிதனால் அடைய முடியுமோ அதனை இது கொண்டிருக்கிறது. பெரும் பெரும் தீமை விளைவிக்கும் பொருளை மனிதனை அழிக்கக் கூடிய பெரும் பெரும் தீமை விளைவிக்கும் பொருள்கள் உள்ளன. அதிலிருந்து தப்பிப்பதற்கான துஆவாக இது இருக்கின்றது.' (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 411-412; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதில் எல்லாவற்றிற்கும் முதலில் செய்யப்பட்டுள்ள துஆ உலகியல் துஆ அல்ல. மார்க்கத்திற்கான துஆவாகும். எனவே, எல்லாவற்றிற்கும் முதலில் நமது மார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக துஆ இருக்க வேண்டும். இதனை மனிதன் செய்தால் பிறகு அவனது நெருக்கத்தின் வாசல் திறக்கிறது. பிறகு மற்ற துஆக்கள் தன்னாலேயே நிறைவேறிக் கொண்டு செல்கின்றன.

அதனை மேலும் தெளிவுபடுத்தியவாறு அசல் துஆ மார்க்கத்தின் உறுதிப்பாட்டிற்கான துஆதான். அதுவே இறைவனது நெருக்கம் மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாகவும் அமைகிறது என்று விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''*உஜீபு தஃவத்தத்தானி இஸா தஆன்* – அதாவது நான் தவ்பா செய்பவரின் தவ்பாவை ஒப்புக் கொள்கிறேன் என்ற இறைவனது இந்த வாக்குறுதி உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்பவரின் ஒப்புதலுக்கு அனுமதி வழங்குகிது. இறைவன் தரப்பிலிருந்து இத்தகைய உறுதி இல்லை எனில் துஆ ஒப்புக் கொள்ளப்படுவது ஒரு சிரமமான காரியமாக இருந்திருக்கும். உண்மையான உள்ளத்துடன் ஒப்புதல் கொடுக்கும் போது அதன் விளைவாக இறைவனும் தனது எல்லா வாக்குறுதியையும் நிறைவேற்றுகிறான். அதனை அவன் தவ்பா செய்பவருக்காக தந்திருந்தான். அதே வேளையில் ஓர் ஒளியின் தோற்றம் அவரிடம் தோன்றுகிறது. மனிதன் நான் எல்லா பாவங்களிலிருந்தும் விலகி விடுவேன் என்றும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்றும் ஒப்புக் கொள்ளும் போது அந்த ஒளி அவரிடம் வெளிப்படுகின்றது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 300; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் தனது நெருக்கம், துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் ஆகியவற்றின் வழியைக் கூறியுள்ளான். அதன் மிக உயரிய வழி தொழுகையின் நிலையாகும் என்று கூறியுள்ளான்.

இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகையின் அசல் நோக்கமும் சத்தும் துஆவே ஆகும். துஆ கேட்பது இறைவனது இயற்கைச் சட்டத்திற்கு மிகவும் ஏற்ற நிலையாகும்.

உதாரணமாக நாம் பார்க்கிறோம். ஒரு குழந்தை அழுகிறது; கதறுகிறது என்றால் அமைதியின்மையை வெளிப்படுத்துகிறது என்றால் அந்த தாய் எவ்வளவு நிம்மதியிழந்து அக்குழந்தைக்கு பால் கொடுக்கிறார். இறைவனுக்கும் அடியானுக்கும் இடையில் அத்தகைய ஒரு தொடர்பே இருக்கிறது. இதனை ஒவ்வொருவரும் புரிய இயலாது. மனிதன் இறைவனது வாசலில் விழுகிறான். மிகவும் எளிமை மற்றும் பணிவு, உருக்கத்துடன் தனது நிலையை எடுத்து வைக்கிறான். தனது தேவையை வேண்டுகிறான் எனில் இறைமையின் நேசம்

எழுச்சி கொள்கிறது. அத்தகைய மனிதர் மீது கருணை காட்டப்படுகிறது. அல்லாஹ்வின் அருள் மற்றும் சிறப்பின் பாலும் ஓர் உருக்கத்தை நாடுகிறது. அல்லாஹ்வின் அருள் மற்றும் சிறப்பின் பாலை அருந்த வேண்டும் என்றால், அவனது அருள்களிலிருந்து கருணையிலிருந்தும் பயனடைய வேண்டும் என்றால் பிறகு அதற்காகவும் பணிவு, உருக்கம், அழுகை, கதறல் தேவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே அவன் முன் அழும் கண்களை எடுத்து வைக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 352; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே அல்லாஹ்வின் அருளால் தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவதிலும் கவனம் உள்ளது. அத்துடன் நஃபில்களின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். பிறகு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருதல் மற்றும் இறை நெருக்கம் பெறுவதற்கான துஆவிற்கு நாம் முன்னுரிமை தந்து அதை செய்ய வேண்டும். முதல் துஆ இதுதான். மற்ற உலகியல் துஆக்கள் பின்னால் தான் வர வேண்டும். நமது உலகியல் துஆக்கள் தேவைகள் ஆகியவற்றை பிறகு இறைவன் தானே நிறைவேற்றி விடுகிறான்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு துஆவை எடுத்து வைக்கிறேன். இதனை இந்நாட்களில் குறிப்பாக செய்ய வேண்டும். அதன் மூலம் இறை நெருக்கம் கிடைக்கும். அல்லாஹ்வின் முன் அன்னார் இந்த துஆவைச் செய்தார்கள்.

ரப்புல் ஆலமீனே! உனது பேருபகாரங்களுக்கு என்னால் நன்றி செலுத்த இயலாது. நீ மிக மிக ரஹீமும் கரீமும் ஆவாய். உனது எண்ண முடியாத பேருபகாரங்கள் என் மீது உள்ளன. எனது பாவத்தை மன்னிப்பாயாக! நான் அழிந்து விடக் கூடாது. என் உள்ளத்தின் மீது உன் மீதுள்ள கலப்பற்ற அன்பை இடுவாயாக! அதன் மூலம் எனக்கு வாழ்வு கிடைக்க வேண்டும். எனது குறைகளை மறைப்பாயாக! என்னிடம் நீ வீரும்புகிற செயலைச் செய்ய வைப்பாயாக! உனது கோபம் என் மீது வெளிப்படுவதை விட்டு நான் உனது கண்ணியமான முகத்திடம் அடைக்கலம் தேடுகிறேன். கருணை காட்டுவாயாக! உலகம் மற்றும் மறுமையின் துன்பங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக! ஒவ்வொரு கருணையும் சிறப்பும் உனது கையில் உள்ளது. ஆமீன். மீண்டும் ஆமீன். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 235; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நம்மை துஆவின் உண்மையை புரிபவர்களாக ஆக்குவானாக! இந்த ரமலான் நம்மை அத்தகைய மக்களில் சேர்க்கட்டும். பிறகு அதில் நிலைத்து நிற்கவும் வைக்கட்டுமாக! எவர்கள் இறைவன் மீதுள்ள ஈமானில் உறுதியாக இருந்து அவனது கட்டளையின்படி செயல்படுகிறார்களோ மேலும் தமது ஒவ்வொரு காரியத்தின் மீது அல்லாஹ்விற்கு முக்கியம் தருவார்களோ அத்தகைய மக்களில் அவன் நம்மை சேர்ப்பானாக! நமது செயல்கள் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப அமையட்டுமாக! நமது கொள்கைகளில் முன்னரை விட அதிக உறுதிப்பாடு ஏற்படட்டுமாக! நம்மிடம் உண்மையான அன்பு உருவாகட்டுமாக! அல்லாஹ் இவ்வுலக மற்றும் மறுவுலகத் துன்பங்களிலிருந்து நம்மை காப்பானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். ஒன்று, கண்ணியத்துக்குரிய ராஜா காலிப் அஹ்மத் சாஹிப் உடையதாகும். இவர் ஜமாஅத்தின் நீண்டகால தொண்டர் ஆவார். உருதுவின் பிரபலக் கவிஞரும் ஆவார். கல்வியாளராகவும் விளங்கினார். இவர் பஞ்சாபின் Text Book Board –ன் சேர்மனாக இருந்தார். 4 ஜூன் 2016 –ல் தமது 88 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ குஜராத்தில் 1928 –ல் பிறந்தார். இவரது தந்தை ராஜா அலி முஹம்மது சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாக இருந்தார். இவர் 1905 –ல் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தார். இவரது தந்தையாருக்கு காதியானில் நாஸிர் மால் மற்றும் நாஸிர் அஃலா –வாகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ராஜா காலிப் சாஹிபுடைய தாய்வழிப் பாட்டானார் மலிக் பரக்கத் அலி சாஹிப் ஆவார். அஹ்மதிய்யத்தின் காலிதாக இருந்த அப்துர் ரஹ்மான் சாஹிப் இவரது மாமா ஆவார்கள். லாஹூரில் மெட்ரிக் முடித்தார். காதியானில் F.A மற்றும் லாஹூர் அரசுக் கல்லூரியில் சைக்காலஜியின் முதுகலைப் பட்டம் பெற்றார். முதல் நிலையில் தேர்ச்சி பெற்றார். கவிஞர் என்ற முறையில் சிறந்த கல்வியாளாரகவும் அறியப்பட்டவர் ஆவார். அல் ஃபஸ்ல் மற்றும் நாட்டின் தினப் பத்திரிகையிலும அத்துடன் உலகளாவிய பத்திரிகைகளிலும் இவரது உருதுக் கவிதைகளும் மற்றும் நஸ்ம்களும் உருது மற்றும் ஆங்கிலத்தில் வெளி வந்து கொண்டிருந்தன.

இவர் பாகிஸ்தான் Air Force –ல் தமது பணியைத் தொடங்கினார். பிறகு பஞ்சாப் கல்வித் துறையில் 1962 ஆம் ஆண்டு சேர்ந்தார். பல்வேறு முக்கியப் பதவிகளிலும் பொறுப்புகளிலும் இருந்தார். General Secretary Controller Board of Inter Media, Secretary Education Punjab மற்றும் Inter Mediate சர்கோதாவின் சேர்மன், பஞ்சாப் Text Book Board Chairman, மிஷனரி தஃலீம் பாகிஸ்தான், அரசின் மிஷனரி தஃலீமின் பிரதிநிதி மற்றும் ஜமாஅத் பணிகளிலும் நீண்ட பொறுப்புகளை இவர் வகித்துள்ளார். ஜமாஅத் அஹ்மதிய்யா லாஹூர் மாவட்டத்தின் செக்கரட்டரி தஃலீம் மற்றும் பல பொறுப்புகளில் பணியாற்றினார். 1972 ஆம் ஆண்டிற்குப் பிறகு பலமுறை Press Conference –ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செய்தித் தொடர்பாளராக இருநது Press Release –களும் விளக்கங்களும் வெளியிடும் வாய்ப்பு பெற்றார். அதிகமான கடிதங்களும் எழுதினார். பத்திரிகைகளுக்கு தாமே விளக்கங்கள் சொல்லும் வாய்ப்பினைப் பெற்றவராகவும், 1992 –லிருந்து 1997 வரை ஃபஸ்லே உமர் பவுண்டேஷன் டைரக்டராகவும், 1974 முதல் 1985 வரை வக்ஃபே ஜதீதின் டைரக்டராகவும், இது தவிர நாயிப் சதர் நாஸிர் பவுண்டேஷன் ஆகவும் இருந்தார். மிகவும் எளிய இயல்புடையவர். கிலாஃபத்துடன் நல்ல தொடர்பு இருந்தது. ஜமாஅத்தின் பொறுப்பாளர்களைப் பெரிதும் மதிப்பவர். அல்லாஹ் இவருடன் மன்னிப்புடன் நடந்து கொள்வானாக! இவரது தகுதியை உயர்த்துவானாக! இவருக்கு குழந்தைகள் இல்லை. வளர்ப்பு மகள் உண்டு. அவருக்கு அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா மலிக் முஹம்மத் அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர் வாழ்வை அர்பணித்தவர். 6 மே 2016 –ல் வஃபாத் ஆகி விட்டார். இந்த இரு ஜனாஸாவும் சென்ற முறை தொழ வைக்க வேண்டியது விடுபட்டு விட்டது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஹஸ்ரத் ஷேக் ஃபஸ்ல் அஹ்மது சாஹிப் பட்டாலவி (ரலி) அவர்களுடைய மூத்த மகன் ஆவார். அஹ்மதிய்ய கலீஃபாக்களுடன் மிகவும் கட்டுப்படுதலுடன் விசுவாசத் தொடர்பும் கொண்டவராக இவர் இருந்தார். எல்லா குழந்தைகளிடம் இந்தப் பண்பை மேற்கொள்ளுமாறு போதனை செய்வார். ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுபவரும் கண்ணியமானவரும் இனிமையானவரும் இன்முகத்துடனும் சந்திப்பவராகவும் இவர் இருந்தார். உறவினர்களுடன் நல்ல முறையில் நடப்பவரும் அனுதாபமும் உள்ள நல்ல மனிதராக இருந்தார். வாழ்நாள் முழுவதும் பல வீடுகளைப் பராமரித்தார். சில குழந்தைகளின் கல்விப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார். வஃபாத் வரை மகிழ்ச்சியுடன் அதனை கடைபிடித்தார். தஹ்ரீகே ஜதீதின் முதல் 5000 முஜாஹிதீன்களில் ஒருவராவார். பள்ளிவாயில்களைக் கட்டுதல் மற்றும் பிற திட்டங்களில் தாராளமாகப் பங்கெடுப்பார். ரப்வாவில் ஒரு நிலத்தை ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளார். 20 அக்டோபர் 1945 –ல் தமது வாழ்பை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்தார். முதலில் வெளியில் வேலை செய்தார். பிறகு வாழ்வை அர்ப்பணித்தார். ஒருநாள் வக்ஃப் செய்து வந்து விட்டார். ரப்ாவில் கட்டுமானத் துறையில் 1949 –லிருந்து 1955 வரை பணி செய்யும் வாய்ப்பு பெற்றார். 1955 –லிருந்து 1968 வரை வகாலத் தஃப்ஸீரில் Superintendent ஆக பணி செய்தார். 1969 – 1982 வரை நாயிப் ஆபீஸர் அமானத் ஆகவும், 1982 – 1986 வரை இரண்டாவது நாயிப் வகீலுல் மால் ஆகவும் தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றார். 1985 –ல் ஓய்வு பெற்றார். ஜூன் 1986 – 1989 வரை நாயிப் வகீலுல் தஃமீலோ ஃதன்பீஸாகப் பணி செய்தார். ஏறக்குறைய 47 வருடங்கள் சேவை செய்தார். பிறகு ஜெர்மனி வந்து விட்டார். பிள்ளைகளுடன் ஜெர்மனி வந்து விட்டார். இறை வணக்கம் செய்பவராக இருந்தார். பிறகு நேரத்தைப் பேணுபவராகவும் திருக்குர்ஆன் ஓதுபவராகவும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களை நன்றாக வாசிப்பவராக இருந்தார். இறை அருளால் மூஸி ஆக இருந்தார். இவரது நினைவாக இரு மகன்களும் 4 மகள்களும் இருக்கிறார். லயீக் தாஹிர் சாஹிப் என்ற நமது முபல்லிக் இவரது இளைய சகோதரர் ஆவார். வாழ்வை அர்ப்பணித்த தொண்டரான அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் ஊழியர் மலக் மஹ்மூது இவரது இளைய மகனாவார். அல்லாஹ் இவருடன் மன்னிப்புடன் நடந்து கொள்வானாக! இவரது சந்ததிகளுக்கும் தலைமுறைகளுக்கும் கிலாஃபத்துடன் ஜமாஅத்துடன் பற்றுமிக்க விசுவாத் தொடர்புக்கான வாய்ப்பினை வழங்குவானாக!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)*

வேண்டிய எந்த தேவையும் இல்லை என்று எவ்வாறு கூறியிருக்க முடியும்? மறுபுறம் இந்த வசனத்தில் ஓரிறைமையைப் பற்றி குறிப்பிடப்படவுமில்லை. இங்கு ஓரிறைமையைப் பற்றிய கருத்ததான் கூறப்பட்டுள்ளது என்றால் من اٰمن بالتّوحيد எவர்கள் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்டுள்ளனரோ என்று அவன் கூறியிருக்க வேண்டும். ஆனால், வசனத்தில் من اٰمن بالله எவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனரோ என்ற சொல்தான் இருக்கின்றது. எனவே, من اٰمن بالله என்ற சொற்றொடர் திருக்குர்ஆனில் அல்லாஹ் என்ற சொல் எந்தெந்த பொருள்களில் வந்துள்ளது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்பதை நம்மீது கடமையாக்குகின்றது. நமக்கு சுயமே திருக்குர்ஆனிலிருந்து திருக்குர்ஆனை இறக்கியவனும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அனுப்பியவனும் அந்த அல்லாஹ்தான் என்ற கருத்து அல்லாஹ் என்ற சொல்லில் அடங்கியிருப்பது தெரிய வருகின்றபோது திருக்குர்ஆன் கூறியுள்ள அதே பொருளை ஏற்றுக் கொண்டு சுயமாக எந்தக் கருத்தையும் கூறாமல் இருப்பதுதான் நமது நேர்மையின் எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 144-147)

மேற்கண்ட இந்த வசனத்திலிருந்து ஓரிறைமையை ஏற்றுக் கொள்வது மட்டும் போதுமானதாகும் என்ற கருத்தே தெரிய வருகின்றது என்றால் பிறகு கீழ்க்காணும் வசனத்திலிருந்து தவ்பா செய்யாமலேயே இறைவனுக்கு இணை வைத்தல் போன்ற எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும் என்பது நிரூபணமாகும். அந்த வசனம் இதுவாகும்:

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا ؕ

நீர் கூறுவீராக! தமக்கே (பாவஞ் செய்து) அநீதியிழைத்து கொண்ட என் அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விட வேண்டாம். நிச்சயமாக, அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிக்கின்றான். (39:54) ஆனால், இந்தக் கருத்து ஒருபோதும் இந்த வசனத்தில் கூறப்படவில்லை.

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் டென்மார்க் சுற்றுப் பயணம் 4 மே 2016

இன்று, ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஸ்கேண்டினேவியாவின் நாடுகளான டென்மார்க் மற்றும் சுவீடன் செல்ல பயணம் மேற்கொண்டார்கள்.

2015-ஆம் ஆண்டில் ஜெர்மனியின் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்த பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 2005 -ஆம் ஆண்டு செப்டம்பர் 6 -ஆம் தேதி செவ்வாய்கிழமை முதல் 11 செப்டம்பர் ஞாயிற்றுக்கிழமை வரை டென்மார்க்கில் தமது முதல் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள்.

2011 -ஆம் ஆண்டில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது ஜெர்மன் சுற்றுப் பயணத்தின்போது *Humburg* -ல் தங்கியிருந்த சமயத்தில் 9 அக்டோபர் 2011 -ல் ஒருநாள் மட்டும் டென்மார்க்கின் கிழக்கே உள்ள *Nokskov* -ற்கு வருகை தந்திருந்தார்கள். ஏனைய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தவிர இங்கு தங்கியிருந்த போது அல்பேனியன் மற்றும் *Kosovo* -விலுள்ள அஹ்மதி சகோதரர்களும் குடும்பங்களும் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும் நற்பேற்றைப் பெற்றனர்.

டென்மார்க்கில் முறையாக நடைபெறுகின்ற இரண்டாவது சுற்றுப் பயணத்தின் ஒரு முக்கிய தனிச் சிறப்பு மிக்க விஷயம் இதுவுமாகும். அதாவது, கோப்பன்ஹேகனிலுள்ள நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுள்ள ஒரு புதிய பிரச்சார நிலையம், அலுவலகங்கள், விரிவான ஹால்கள், நூலகம், தங்குமிடம், விருந்தினர் இல்லம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஒரு முழுமையான புதிய காம்ப்ளக்ஸாக அது உருவாகியுள்ளது. இந்தப் பயணத்தில் அதற்கான துவக்க நிகழ்ச்சி இருக்கும். டென்மார்க்கில் ஹுஸூர் அவர்களின் இந்த அருளுக்குரிய பயணம் 4 மே 2016 புதன்கிழமையன்று ஆரம்பமானது. பகல் 12:30 மணிக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து வெளியே வந்தார்கள். தமது அன்பான எஜமானரை வழியனுப்பி வைப்பதற்காக ஜமாஅத் சகோதரர்கள் இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாசயிலின் வளாகத்தில் ஒன்று திரண்டிருந்தனர். ஹுஸூர் அவர்கள் துஆ செய்த பிறகு தமது கையை உயர்த்தி எல்லாருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். பிறகு விமான நிலையத்திற்குப் பயணமானார்கள்.

ஹுஸூர் அவர்கள் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்னதாக பொருள்களுக்கான *Booking, Boarding Card* பெறுவது மற்றும் *Immigration* தொடர்பான நடவடிக்கை ஒரு சிறப்பான ஏற்பாட்டின் கீழ் ஏற்கனவே நிறைவடைந்திருந்தது.

1.00 மணி 10 நிமிடத்திற்கு ஹுஸூர் அவர்கள் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்கள். *Protocal* அலுவலர் அவர்கள் ஹுஸூர் அவர்களை வரவேற்றார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் *Special Launch* -ற்குச் சென்றார்கள். யூ.கே ஜமாஅத்தின் அமீரான மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப், மதிப்பிற்குரிய அஹ்லாக் அஹ்மது சாஹிப் (வகாலாத் தப்ஷீர், இலண்டன்), மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா வகாஸ் அஹ்மது சாஹிப் (தலைவர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா U.K) மற்றும் மதிப்பிற்குரிய ஸெய்யது முஹம்மது அஹ்மது நாஸிர் சாஹிப் (சிறப்பு பாதுகாப்பின் துணை அலுவலர்) ஆகியோர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக ஹுஸூர் அவர்களுடன் வந்திருந்தனர். இந்த எல்லா சகோதரர்களும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் கை குலுக்கும் நற்பேற்றைப் பெற்றனர். இவர்கள் அனைவரும் ஹுஸூர் அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

2.00 மணி 10 நிமிடத்திற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் விமானத்தில் பயணிப்பதற்காக *Launch* -லிருந்து புறப்பட்டார்கள். ஹுஸூர் அவர்கள் இருந்த கார் ஒரு சிறப்பான ஏற்பாட்டின் கீழ் விமானத்திற்கு அருகில் கொண்டு வரப்பட்டது. *Protocol* அலுவலர் அவர்கள் ஹுஸூர் அவர்களை விமானத்தில் ஏற்றிய பிறகே திரும்பி வந்தார்கள்.

பிரிட்டீஷ் ஏர்வேஸின் விமானமான *BA 818* 2.00 மணி 35 நிமிடத்திற்கு இலண்டனிலுள்ள *Heathrow* விமான நிலையத்திலிருந்து டென்மார்க்கிலுள்ள கோப்பன்ஹேகன் விமான நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றது.

1.00 மணி நேரம் 50 நிமிடங்கள் பயணித்த பிறகு டென்மார்க்கின் உள்ளூர் நேரத்திற்கேற்ப 5.00 மணி 25 நிமிடத்திற்கு விமானம் கோப்பன்ஹேகனிலுள்ள விமான நிலையத்தில் இறங்கியது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அருளுக்குரிய பாதங்கள் மூன்றாவது முறையாக டென்மார்க்கின் பூமியில் பட்டன.

டென்மார்க்கின் நேரம் இங்கிலாந்தின் நேரத்தை விட ஒரு மணி நேரம் முன்னே இருக்கும். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் விமானத்திலிருந்து வெளியே வந்ததும் *Portocol* அலுவலருடன் டென்மார்க்கின் அமீரும் பொறுப்புப் பிரச்சாரர்களுமான மதிப்பிற்குரிய முஹம்மது ஸகரிய்யா கான் சாஹிப் அவர்களும் டென்மார்க்கின் பிரச்சாரகரான மதிப்பிற்குரிய முஹம்மது அக்ரம் மஹ்மூது சாஹிப் அவர்களும், டென்மார்க்கின் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் அவர்களும் ஹுஸூர் அவர்களை வரவேற்றனர். ஹுஸூருடன் கை குலுக்கும் நற்பேற்றையும் பெற்றனர்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது கார் விமானத்தின் கதவிற்கு அருகிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ஸிரிஹில் அஸீஸ் அவர்கள் காரில் பயணமானார்கள். *Immigration* -ன் எந்தவொரு *Process* -ம் செய்யப்படாத நிலையில் இங்கிருந்து ஜமாஅத்தின் தலைமையகமான நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு ஹுஸூர் அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

6.00 மணி 15 நிமிடத்திற்கு ஹுஸூர் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்குச் சென்று சேர்ந்தார்கள். ஜமாஅத் சகோதர சகோதரிகள் அனைவரும் தமது அன்பான எஜமானரை வரவேற்றனர். சிறுமிகளின் குழு வரவேற்புக் கீதங்களை பாடியது. ஹுஸூர் அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் காரிலிருந்து வெளியே வந்ததும் டென்மார்க்கின் பிரச்சாரகரான மதிப்பிற்குரிய நிஃமத்துல்லாஹ் பஷாரத் சாஹிப் அவர்களும் டென்மார்க்கின் பிரச்சாரகரான மதிப்பிற்குரிய ஃபலாஹித்தீன் சாஹிப் அவர்களும் ஹுஸூர் அவர்களை வரவேற்றனர். ஹுஸூர் அவர்களுடன் கை குலுக்கும் நற்பேற்றையும் பெற்றனர். டென்மார்க்கின் லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவி மதிப்பிற்குரிய அமத்துல் மன்னான் சாஹிபா அவர்கள், ஹஸ்ரத் பேகம் சாஹிபா ஸில்லுஹல் ஆவி (ஹுஸூர் அவர்களின் துணைவியார்) அவர்களை வரவேற்றார்கள். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது கைகளை உயர்த்தி எல்லாருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் தாம் தங்கும் பகுதிக்குச் சென்றார்கள்.

இன்றைய நாள் டென்மார்க் ஜமாஅத்திற்கு மிகவும் அருளுக்குரிய மகிழ்ச்சிகரமான நாளாகும். ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய பாதம் இந்த மண்ணில் பட்டிருக்கின்றது. அல்லாஹ் இந்த நற்பாக்கியத்தை இந்த ஜமாஅத்திற்கு மிகுதியான நன்மை மற்றும் அருளுக்குக் காரணமானதாக ஆக்குவானாக!

இதற்குப் பிறகு 6.00 மணி 40 நிமிடத்தில் ஹுஸூர் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு வருகை தந்து ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளைச் சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சார நிலையம் மற்றும் ஏனைய கட்டிடங்களைப் பார்வையிட்டார்கள்.

இந்த புதிய காம்ப்ளக்ஸில் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு ஒட்டியுள்ள இடத்தில் நூலகம், அலுவலகங்கள், எட்டு *Wash Rooms*, ஜமாஅத்தின் ஒரு சமையலறை ஆகியவை கட்டப்பட்டுள்ளன. கீழே *Basement* -ல் லஜ்னாவிற்கான தொழுகை மையம் கட்டப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 210 சதுர மீட்டராகும். இதைத் தவிர இங்கு லஜ்னாவிற்கான ஓர் அலுவலகமும், *Sound System* உள்ள அறையும், ஒரு *Learning Room* -ம் கட்டப்பட்டுள்ளது. இதைத் தவிர நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு எதிரில் சாலையின் மறுபுறம் மிகவும் பழமையான

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 21 JULY 2016 Issue No. 20

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

ஒரு வீடு 1999 -ஆம் ஆண்டில் வாங்கப்பட்டது. அதன் கட்டடம் இடிக்கப்பட்டு இங்கு 383 சதுர மீட்டரில் ஒரு Basement கட்டப்பட்டது. இதில் 8 அலுவலகங்கள் உள்ளன. மேலும் 180 சதுர மீட்டரில் ஒரு விரிவான ஹாலும் ஒரு ஸ்டோர் ரூம் அதில் இருக்கின்றது.

இந்த Basement -ன் மீது 120 சதுர மீட்டரில் முரப்பிக்கான வீடு கட்டப்பட்டுள்ளது. இதைத் தவிர இரு அறைகளும் சமையலறை வசதியும் ஒரு Guest House -ம் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இந்தப் பழைய வீடு இருந்த இடத்தில் மொத்தம் 727 சதுர மீட்டரில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எல்லாக் கட்டடங்களையும் ஒன்று சேர்த்து ஒட்டுமொத்தமாக 1209 சதுர மீட்டரில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்த KG Complex -ம் மிகவும் அழகாக இருக்கின்றது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவற்றைப் பார்வையிட்டபோது, நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலை ஒட்டியுள்ள அலுவலகங்கள் மற்றும் நூலகத்தைப் பார்வையிட்ட பிறகு கீழேயிருந்த லஜ்னாவின் தொழுகைக்கான ஹாலுக்குச் சென்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் டென்மார்க்கின் அமீர் சாஹிப் அவர்கள் ஹாலின் ஒரு பகுதி பள்ளிவாயிலுக்கு முற்பகுதியில் இருக்கின்றது. எனவே, ஹாலில் சுவரையொட்டி ஒரு அடையாளமிடப்பட்டிருக்கின்றது. அதன் மூலமாக அதற்கு பின்னுள்ள ஸஃப்களில் நின்று தொழ வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வெறுமனே அடையாளமிடுதல் மட்டும் போதாது. மாறாக முறையாக முன்னே ஒரு தடையை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்கள். இதற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் கட்டடத்தின் வெளிப்புறப் பகுதியையும் பார்வையிட்டார்கள். டென்மார்க்கின் அமீர் சாஹிபிடம் பல்வேறு விஷயங்களைப் பற்றி கேட்டார்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கட்டடத்தின் Basement இருக்கும் பகுதிக்கு வந்தார்கள். அந்த Basement -ல் எட்டு அலுவலகங்களும் ஒரு பெரிய ஹாலும் கட்டப்பட்டிருந்தது. அலுவலகங்களைப் பார்வையிட்ட பிறகு ஹுஸூர் அவர்கள் ஹாலுக்கு வந்தார்கள். அங்கு பெண்கள் ஹுஸூர் அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். பெண்கள் தமது அன்பான எஜமானரைப் பார்க்கும் நற்பேற்றைப் பெற்றனர். சிறுமிகளின் குழு துஆக்கள் வடிவிலிருந்த கவிதைகளை கூட்டுப் பாடலாக பாடியது. ஹுஸூர் அவர்களை வரவேற்கும் கீதங்களைப் பாடியது. ஹுஸூர் அவர்கள் ஏறக்குறைய 25 நிமிடங்கள் இங்கு அமர்ந்திருந்தார்கள். இந்தத் தருணத்தில் சிறுமிகள் கவிதைகளைப் பாடினர். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மிகுந்த பரிவுடன் எல்லா சிறுமிகளுக்கும் சாக்லேட் வழங்கினார்கள். அதற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் விருந்தினர் இல்லத்தையும் பார்வை -யிட்டார்கள். பிறகு, தாம் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 9.00 மணிக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுக்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்து தொழுதார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள், தாம் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

டென்மார்க்கில் ஜமாஅத்தின் பிரச்சார நிலையம் 1958 -ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்போது சுவீடனின் பிரச்சாரகராக இருந்த மதிப்பிற்குரிய ஸய்யிது கமால் யூசுஃப் சாஹிப் அவர்கள் முதல் முறையாக டென்மார்க் வந்து சேர்ந்தார்கள். அப்போது ஜமாஅத்தின் வறிய நிலை எவ்வாறிருந்தது என்றால் அவர் மக்களிடம் லிஃப்ட் கேட்டுத் தான் தமது பயணத்தை நிறைவு செய்தார். சிறிது காலம் வரை Youth Hotel -ல் தங்கியிருந்தார்கள். அதற்குப் பிறகு குடும்ப விருந்தினராக பல்வேறு வீடுகளில் தங்கியிருந்தார்கள்.

டென்மார்க்கின் முதல் உள்ளூர் அஹ்மதி அப்துஸ் ஸலாம் சாஹிப் மெட்ஸன் ஆவார்கள். இவர்கள் 1958 -ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். அவர்கள் டேனிஷ் மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்தார்கள். மேலும் கௌரவப் பிரச்சாரகராகத் தொண்டு செய்யும் நற்பேற்றையும் பெற்றார்கள்.

டென்மார்க்கின் தலைநகரம் கோப்பன்ஹேகன் ஆகும். ஸ்கேண்டி -நேவியாவின் முதல் பள்ளிவாயில் நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலாகும். 6 மே 1966 -ல் இப்பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களுடன் மதிப்பிற்குரிய சௌத்ரி சர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் ஜெர்மனியின் பிரச்சாரகரான சௌத்ரி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களும் இங்கிலாந்தின் பிரச்சாரகரான பஷீர் அஹ்மது ரஃபீக் சாஹிப் அவர்களும் சேர்ந்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முதலிலேயே அனுப்பி வைத்திருந்த காதியானிலுள்ள முபாரக் பள்ளிவாயிலின் செங்கலை அடிக்கல்லாக நாட்டினர்.

பெண்கள் இந்தப் பள்ளிவாயிலுக்காக பொருள் தியாகம் செய்திருந்தனர். இந்தப் பள்ளிவாயில் பெண்கள் கொடுத்த சந்தாக்கள் மூலமாகவே கட்டப்பட்டது. இந்தப் பள்ளிவாயிலுக்கு (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மனைவியான) ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களின் பெயரைச் சூட்டும் விதமாக நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயில் என்று பெயர் சூட்டப்பட்டது.

கட்டடக்கலையின் அடிப்படையில் இந்த பள்ளிவாயிலுக்கு தனிச்சிறப்பு மிக்க தகுதி கிடைத்திருக்கின்றது. இந்தச் சிறந்த முன்மாதிரியானது முழு டென்மார்க்கிலும் புகழ்பெற்று விளங்கியது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் தனது முதலாவது டென்மார்க் சுற்றுப்பணத்தின் போது 1967 -ஆம் ஆண்டு ஜுலை 21 -ஆம் தேதி அருளுக்குரிய வெள்ளிக்கிழமை அன்று நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலைத் துவக்கி வைத்தார்கள்.

டென்மார்க்கின் பொறுப்புப் பிரச்சாரகராக இருந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் மீர் மஸ்வூத் அஹ்மது சாஹிப் அவர்கள் மிகவும் இக்கட்டான நிலைமைகள் இருந்தும் ஒன்றுகூடி பள்ளிவாயில் கட்டுவதற்கான இடத்தைத் தேடுவதிலும் அதை வாங்குவதிலும போற்றத்தக்க பெரும் தொண்டுகளைச் செய்துள்ளார்கள். இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக ஒட்டு மொத்தமாக ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காக இந்த முழுத் தொகையையும் தலைமையக லஜ்னா தலைவியான ஹஸ்ரத் ஸய்யிதா உம்மே மதீன் மர்யம் ஸித்தீகா சாஹிபா அவர்களின் கண்காணிப்பன் கீழ் அஹ்மதிப் பெண்கள் ஒன்று திரட்டினர். பெரும்பாலார் தமது முழு நகைகளையும் சந்தாவாகக் கொடுத்து விட்டனர். தொடக்கத்தில் இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணிக்கப்பட்டது. பிறகு பள்ளிவாசல் கட்டப்பட்டபோது அத்துடன் அதற்கான செலவுகளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இறுதியில் அது ஐந்து இலட்சம் ரூபாய் வரை எட்டியது. அஹ்மதிப் பெண்கள் இந்த எல்லா தொகையையும் முழுமையாகச் செலுத்தி விட்டனர். முழுக்க முழுக்க அஹ்மதிப் பெண்கள் தமது சந்தாக்கள் மூலம் கட்டிய பள்ளிவாயில்களில் ஒரு பள்ளிவாயிலாக நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயில் திகழ்கின்றது.

இதற்கு முன்னர் இந்த நுஸ்ரத் ஜஹான் பள்ளிவாயிலுடன் ஒரு சிறிய பிரச்சார நிலையமும் இருந்தது. இரண்டிற்கும் சேர்த்து ஒரு சமையலறை இருந்தது. மேலும் அத்துடன் ஒரு சிறிய அலுவலகமும் இருந்தது. பேஸ்மண்ட்டில் ஒரு ஸ்டோர் ரூமும் 32 சதுர மீட்டரில் ஒரு ஹாலும் இரண்டு சிறிய Wash Room -களும் இருந்தன. இரண்டு சிறிய அறைகள் இருந்தன. அதில் ஒரு அறை குத்தாமுல் அஹ்மதிய்யா அலுவலகமாகவும் இரண்டாவது அறை M.T.A -விற்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு மேலேயும் கீழேயும் முழுவதுமாக கட்டடத்தின் பரப்பளவு 201 சதுர மீட்டராக இருந்தது.

இப்போது அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாயிலை ஒட்டியிருந்த கட்டடப் பகுதிகளை இடித்து விட்டு ஒரு பெரும் பகுதியில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறே பள்ளிவாயிலுக்கு எதிரில் சாலையின் மறுபுறத்திலும் உள்ள மிகவும் விரிவான கட்டடங்களில் இரண்டு பெரிய ஹால்கள், பெரும் எண்ணிக்கையில் அலுவலகங்கள், நூலகம், பிரச்சார நிலையம், பிரச்சாரகர் தங்குமிடம், விருந்தினர் இல்லம், ஸ்டோர், பல Wash Room -கள் போன்றவை அடங்கும். இதைப் பற்றிய விபரங்கள் ஏற்கனவே தரப்பட்டு விட்டது.

(தொடரும்....)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad